மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கிராமத்தில் ஒரு விவசாயிக்கு ஒரு ஹெக்டேர் நிலம் இருக்கிறது என்று கணக்கு வைத்திருக்கிறார். எனவே, அவருக்கு அந்த ஊரிலே அந்த அடையாள அட்டை வழங்கப்படுகிறது. அவருக்கு இன்னொரு ரெவின்யூ கிராமத்திலே அவருடைய பெயரிலே நிலம் இருக்கலாம், அல்லது இன்னொரு ஒன்றியத்திலே இருக்கலாம், அல்லது இன்னொரு தாலுக்காவிலே இருக்கலாம். அது தெரிவதற்கு சில சமயங்களிலே வாய்ப்புக்கள் இருப்பதில்லை. சில இடங்களிலே ஒரு குடும்பத்திலே அந்த குடும்பத் தலைவருக்கு ஒரு ஹெக்டேர் இருக்கிறது. தலைவியின் பெயரிலே இருக்கிறது. பிள்ளைகள் பெயரிலே இருக்கிறது. அவர்கள் வருகின்றபோது, தனியாக தனக்குள்ள நிலத்தை. அந்த கிராம நிர்வாக அதிகாரிகளிடம் எழுதித் தருகிறார்கள். அதன் அடிப்படையிலே வழங்கப்படுகிறது. அது போல. மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகின்றபோது, சில இடங்களில் இந்த அடையாள அட்டைகள் வியாபாரிகளிடத்திலே இருக்கிறது என்று சொன்னார்கள். ரேசன் கார்டு கொடுப்பதைப் போல சில இடங்களிலே தவறுகள் இருப்பதற்கு சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. அப்படிப்பட்ட தவறுகள் வந்தபோது, இந்த அரசு அந்த அடையாள அட்டைகளைப் பறிமுதல் செய்து, அப்படி வைத்திருந்தவர்கள் மீது நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 316, திரு. ஆர். ஈஸ்வரன், இருக்கையில் இல்லை. திரு. ஞானசேகரன் கேட்கிறார். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

316—

சிறு விவசாயிகளுக்கு ஒன்றியங்கள் மூலம் எண்ணெய் வித்துப் பொருள்கள் விநியோகம்.

*14457—திரு. ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா:

சிறு விவசாயிகளுக்கு அரசு கொடுக்கக்கூடிய எண்ணெய் வித்துப் பொருள்களை அந்தந்த ஒன்றியங்களின் மூலம் விளம்பரம் செய்து விநியோகிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றியங்களின் மூலம் விளம்பரம் செய்வது இல்லை. ஆனால் வேளாண்மைத்துறை மூலம் மேற்படி எண்ணெய் வித்துப் பொருள்கள் விநியோகம் செய்யப்படுகின்றன மேலும் ஒன்றிய

அளவில் உதவி வேளாண்மை அலுவலர்கள் நிரந்தரப் பயணத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு கிராமத்திற்கும் சென்று விவசாயி களுக்கு வழங்கப்படும் சலுகைகள் குறித்து எடுத்துச் சொல்லிக் கொண்டு வருகிறார்கள்.

முற்பகல் 10-55

திரு. சி. ஞானசேகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மை விரிவாக்க அலுவலர்களும், களப்பணியாளர்களும் இன்று கிராமங்களுக்கு உரிய தொகைக்கு ஏற்றவாறு இல்லாமல் ரேஷ்யோ குறைவாக இருக்கிற காரணத்தால் களப்பணி யாளர்களை கிராமங்களில் காண முடிவது இல்லை. எனவே ஊராட்சி ஒன்றியங்களின் சார்பாக ஒவ்வொரு பஞ்சாயத்துக் களிலும் ஒவ்வொரு உதவியாளர்கள் இருக்கிறார்கள். ஆகவே ஊராட்சி ஒன்றியத்தின் வாயிலாக இதுபோன்ற விளம்பரங் களைச் செய்தால் இன்று வறுமையில் வாடிக் கொண்டிருக்கிற விவசாயிகளுக்கு நிலக்கடலை, ஆமணக்கு, சூரிய காந்தி, தென்னை போன்ற எண்ணெய் வித்துக்களை எளிதாக அவர்கள் பெற வாய்ப்பு இருக்கும். ஆகவே அரசு மறுபரிசீலனை செய்து அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களின் வாயிலாக விளம்பரம் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஊராட்சி ஒன்றியத்தினுடைய அலுவலக வளாகத்திலே தான் வேளாண்மை விற்பனைக் கூடங் களும் இருக்கின்றன. ஒன்றியங்களுக்கு செல்லக் கூடிய விவ சாயிகள் அந்தக் கூடங்களுக்கு செல்லலாம். அங்கே கூட சில இடங்களில் எழுதி வைத்திருக்கிறார்கள். இன்னின்ன திட்டத் தின் கீழ் இன்னின்ன இடு பொருள்கள் மானியத்தின் கீழ் வழங்கப்படுகின்றன என்று எழுதி வைத்திருக்கிறார்கள். அதனை விவசாயிகள் படித்து பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதேபோல காலையிலே வானொலியைத் திருப்பினாலும், மாலையிலே தொலைக்காட்சியைப் பார்த்தாலும் அந்தப் பகுதியிலே எந்தெந்த இடு பொருள்கள் இருக்கின்றன, எந் தெந்த பயிருக்கு என்னென்ன நோய் இருக்கிறது, அதை எப்படி தடுக்கலாம் என்ற விளம்பரங்களைக் கூட அரசு செய்து கொண்டு வருகிறது. இத்தனைக்கும் மேலாக மாண்புமிகு உறுப்பினர்களுடைய கவனத்திற்கு ஒன்றை நான் கொண்டு வர ஆசைப்படுகிறேன். கடந்த வேளாண்மை குறித்த மானிய கோரிக்கையின் போது வேளாண்மைத் துறை எந்தெந்த திட் டத்தின் கீழ் எவ்வளவு மானியங்களை அரசு விதைகள், மருந்துகள் கொடுத்து வருகிறது என்ற கையேடுகளை மாண்புமிகு உறுப்பினர் களுக்கு தந்திருக்கிறேன். அதனைப் பார்த்து மாண்புமிகு உறுப் பினர்கள் தன் தொகுதி மக்கள் பயன் பெறும் வகையில் விளம் பரம் செய்தால் நலமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

[1993 ஏப்ரல் 12

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ப. கலியபெருமாள்.

திரு. ப. கலியபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை மூலமாக வழங்கப்படுகின்ற எண்ணெய் வித்துக்கள் எல்லாம் சிறு விவசாயிகளின் பெயரால் அங்கிருக்கிற அலுவலர்களால் ஒட்டு மொத்தமாக தனியாருக்கு விற்பனை செய்யப்படுகிறது. அதனைத் தடுப்பதற்கு அந்தந்த தொகுதியில் இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களின் பரிந்துரையோடு—அங்கு இருக்கிற விவசாயிகளுக்கு இவ்வளவு தான் கொடுக்க வேண்டும் என்று நிர்ணயம் செய்து—சட்டமன்ற உறுப்பினர்களின் பரிந்துரையுடன் கொடுக்க ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு பகுதிக்கும், ஒவ்வொரு மாவட்டத்திற்கு இவ்வளவு ஒதுக்கீடு அதன் கீழே அந்த வேளாண்மை கோட்டத்திற்கு இவ்வளவு ஒதுக்கீடு, அந்த ஒன்றியத்திலே இருக்கக் கூடிய வேளாண்மை அலுவலருக்கு இவ்வளவு ஒதுக்கீடு என்று அரசாங்கம் ஒதுக்கீடு செய்கிறது. சில நேரங்களிலே தவறு வருவது தவிர்க்க முடியாதது என்று நான் கருதுகிறேன். அத்தோடு அப்படி தவறு செய்பவர்கள் மீது அரசு கடுமையான நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. எனவே மாண்புமிகு உறுப்பினர்கள் யார் யார் தவறு செய்திருக்கிறார்கள் என்பதை அரசினுடைய கவனத்திற்கு கொண்டு வந்தால் நிச்சயமாக அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 317, திரு. எம். பூராசாமி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

317—

பூம்புகார் கடற்கரை ஓரங்களில் புறம்போக்கு நிலங்களில் சவுக்குக் கன்றுகள் நடுதல்.

*15785—திரு. எம். பூராசாமி:

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பூம்புகார் தொகுதியில், கடற்கரை ஓரங்களில் உள்ள மணற்பாங்கான அரசு புறம்போக்கு நிலங்களில் சவுக்குக் கன்றுகள் நடுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?